# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2458 - 2025 ඔක්තෝබර් මස 10 වැනි සිකුරාදා - 2025.10.10

2458 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 21 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1751 - B 82727- 403 (2025/10)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் தொழில்நுட்பம் சாரா முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர் – வகுதி 2

**வேலைப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025**

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் வேலைப் பரிசோதகர் தரம் III பதவியில் நிலவும் 13 வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்யும் பொருட்டு தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**:

சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரினால் நியமிக் கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நடாத்தப் படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். நியமனம் செயல்வலுப்பெறும் திகதியானது சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரி னால் தீர்மானிக்கப்படும்.

02. **சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்:**

2.1 அரசசேவை நியமனத்தை நிர்வகிக்கும் பொது வான நிபந்தனைகளுக்கும் தாபன விதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடு களுக்கும் 14.12.2022 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க மிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரி கையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் 16.02.2012 ஆம் திகதி அரசாங்கசேவை ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் தொழில்நுட்பம் சாரா முகாமைத்துவ உதவியாளர் – வகுதி 2 பதவியணியின் வேலைப்பரிசோதகர் பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கும் நிபந் தனைகளுக்கும் மற்றும் அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு செய்யப்பட்ட அல்லது எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைய தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி குறித்த பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். எனினும் புதிய நியமன தாரிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டம் பற்றிய அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனதாரிகள் உட்பட வேண்டும். விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

2.3 இப்பதவிக்குநியமிப்புச்செய்யப்படுபவர்கள்மூன்று (3) வருடங்களுக்கு தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுவதோடு குறித்த மூன்று (3) வருட காலப் பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.4 பொதுநிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனோடொத்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் உரிய மட்டத்திலான மொழித்தேர்ச்சியை அடைதல் வேண்டும்.

2.5 அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் அரசின் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் திணைக் களத்தின் ஏனைய விதிகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

2.6 அரசாங்கசேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல.01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனை எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

2.7 தகுதிகளை கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உரிய வெற்றிடம் நிலவும் பிராந்திய சமுதாயஞ்சார் சீர்திருத்த அலுவலகத்தில் ஐந்து (5) வருட கட்டாய சேவைக்காலத்தின் பின்னரே வேலைப்பரிசோதகர் இடமாற்றத் திட்டத்திற்கமைய வருடாந்த இட மாற்றத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் இப்பதவிக்கு உரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:

ரூபா 45,230.00 – 10x540 - 11 x 630 -10 x890 – 10x1190 – ரூபா 78,360.00 (MN 1 – 2025)

அவ்வாறே வழங்கப்படும் சம்பளமானது குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படுகின்ற வேறு கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள்:**

அ)1. சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி

2. கணிதம் அத்துடன்,

3. வேறு பாடங்கள் இரண்டிற்கு திறமைச் சித்தி களுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களுடன் கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

ஆ) கல்விப்பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தது ஒரு(01) பாடமாவது (பொது அறிவுப்பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்

4.2 **அனுபவம்:**

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் சமூகசேவை மற்றும் சமுதாய வேலை பற்றிய ஒரு (01) வருட அனுபவம்

4.3 **வயதெல்லை:**

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாதும் 30 வயதிற்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4.4 **உடற்தகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

4.5 **ஏனைய தகைமைகள்:**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி உயர்ந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

05. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை:**

சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப்பரீட்சையின்போது பெறப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

**நேர்முகப்பரீட்சையின் போது புள்ளி வழங்கும் திட்டம்:** மொத்தப்புள்ளிகள் 100

| | *விடயம்* | *புள்ளிகள்* | *பெறக்கூடிய அதியுயர் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் | | |
| | 1. விசேட பட்டம் | 20 | |
| | 2. பட்டம் | 15 | |
| | 3. டிப்ளோமா பாடநெறி (6 மாதங்கள் அல்லது மேற்பட்டது) | 10 | |
| | 4. சான்றிதழ் பாடநெறி (3 மாதங்கள் அல்லது மேற்பட்டது) | 05 | |
| | 5. அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த(உயர்தர) சான்றிதழுக்கமைய | | |
| | விசேட சித்தி (A) – (ஒரு பாடத்திற்கு 3 புள்ளிகள் வீதம்) | 06 | |
| | அதிதிறமைச்சித்தி (B) – (ஒரு பாடத்திற்கு 2 புள்ளிகள் வீதம்) | 04 | |
| | திறமைச்சித்தி (C) – (ஒரு பாடத்திற்கு 1 புள்ளி வீதம்) | 02 | |
| | சாதாரண சித்தி (S) – (ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம்) | 01 | |
| | (1 தொடக்கம் 4 வரையிலான பகுதிகளுக்கு பெறப்பட்ட அதியுயர் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 02 | **ஆங்கில மொழியறிவு :** | | 20 |
| | 1. ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட உயர் டிப்ளோமா பாடநெறியொன்றை கற்றிருத்தல் அல்லது அடிப்படைப் பட்டப்படிப்பை ஆங்கில மொழியில் கற்றிருத்தல் | 20 | |
| | 2. ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா பாடநெறியொன்றை கற்றிருத்தல். | 18 | |
| | 3. க.பொ.த. (உ.தர) பரீட்சையில் பிரதான பாடமாக ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் | 15 | |
| | 4. சான்றிதழ் கற்கைநெறி (6 மாதங்களோ அல்லது கூடியதோ) | 12 | |
| | 5. க.பொ.த. (உ.தர) பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியோ அல்லது அதற்கு மேற்பட்ட சித்திக்கு | 10 | |
| | 6. க.பொ.த. (உ.தர) பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் | 05 | |

| | *விடயம்* | *புள்ளிகள்* | *பெறக்கூடிய அதியுயர் புள்ளிகள்* |
|---|---|---|---|
| | 7. அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த (சா.தர) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு<br>விசேட சித்தி (A)<br>அதிதிறமைச் சித்தி (B)<br>திறமைச் சித்தி (C)<br>சாதாரண சித்தி (S)<br>(பெறப்பட்ட அதியுயர் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | <br>08<br>06<br>04<br>02 | |
| 03 | **கணினி அறிவு :**<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்<br>1. உயர் டிப்ளோமா பாடநெறி (ஒரு வருடமோ அல்லது கூடியதோ)<br>2. டிப்ளோமா பாடநெறி (ஒரு வருடமோ அல்லது கூடியதோ)<br>3. சான்றிதழ் கற்கைநெறி (6 மாதங்களோ அல்லது கூடியதோ)<br>4. வேறு பயிற்சிநெறிகள் (03-06 மாதங்களுக்குள்)<br>(பெறப்பட்ட அதியுயர் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | <br><br>25<br>20<br>10<br>05 | 25 |
| 04 | **மேலதிக அனுபவம் :**<br>சமூக சேவை மற்றும் சமுதாய வேலைகள் தொடபில் முனைப்புடன் பங்களிப்புச் செய்தல் (ஒரு வருட அனுபவத்திற்கு 6 புள்ளிகள் வீதம் 5 வருடங்கள் வரை) | 30 | 30 |
| 05 | நேர்முகப்பரீட்சைச் சபையின் அனுமதியின் பிரகாரம் தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன் | 05 | 05 |
| 06 | மொத்தம் | | 100 |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய 22-29 சென்றிமீற்றர் அளவிலான A4 கடதாசியில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். உரிய விபரங்களை விண்ணப்பதாரி தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்த வேண்டும். முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் அனைத்து தகுதிகளை கொண்டிராத விண்ணப்பங்களும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங் களும் மாதிரிக்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப் பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தினது நிழற்பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது உசிதமாக அமையும். விண்ணப் பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

07. **விண்ணப்பங்களை அனுப்புதல் :**

7.1 இவ்வறிவித்தலின் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 24.10.2025 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். பதிவுத்தபாலில் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஆணையாளர்,
சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்,
15 ஆவது மாடி,
“மெஹெவர பியஸ”,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

7.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 24.10.2025 ஆகும். இத்தினத்தன்று உரிய தகை மைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

7.3 தற்போது அரசாங்க சேவையில் (திணைக்களம்/ கூட்டுத் தாபனம்/சபை/சிவில் அமைப்பு) ஈடுபட்டுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்க முடியும் என்ற நிறுவனத்தலைவரின் உறுதியுரை யுடன் நிறுவனத் தலைவர் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.4 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் “வேலைப்பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த) – 2025” எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**கவனிக்கவும்:**

1. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 தொடக்கம் 4 வரையான தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு சான்றிதழ்களின் விண்ணப்பதாரியால் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு அதியுயர் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் 1:10 என்ற விகிதத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
2. சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை கோரும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரியின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
3. அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/நிறுவனத்தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.
4. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் மற்றும் அரசினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அவற்றின் திருத்தங்கள் இப்பதவிக்கு பொருத்தமாகும்.
(இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளதுடன் மொழி களுக்கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் சிங்களமொழியிலான அறிவித்தல் வலுவிலிருக்கும்).

திலான் குணரத்ன,
ஆணையாளர்,
சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்.

2025, செத்தெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு [ ]

**நீதி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு**

**சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் வேலைப் பரிசோதகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2025**

01. தனிப்பட்ட விபரங்கள்:

1. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்): ……………………………………………………
   முழுப்பெயர் (ஆங்கிலம்): ………………………………………………………………
2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழ்): ……………………………………
   முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலம்)
3. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்): …………………………………………………
   நிரந்தர முகவரி (ஆங்கிலம்): ……………………………………
4. பாலினம் (ஆண்/பெண்): ………………………………………
5. குடியியல் நிலை(திருமணமானவர்/திருமணமாகாதவர்): …………………………..
6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: …………………
7. பிறந்த திகதி: வருடம்: …………….மாதம் :………… திகதி:..................
8. விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது : வருடங்கள் :……….மாதங்கள் :………நாட்கள் :.................
9. தொலைபேசி இலக்கம்: ………………………

02. கல்வித்தகைமை

02.1 க.பொ.த. (சா.தரம்) பெறுபேறு:

1.பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு: ………………
2.பரீட்சைச் சுட்டெண்: ……………..
3. பரீட்சைப் பெறுபேறுகள் :

| *பாடம்* | *பெறுபேறு* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

02.2 க.பொ.த (உ.தரம்) பெறுபேறு:

1. பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு: ………………

2. பரீட்சைச் சுட்டெண்: ……………..

3. பரீட்சைப் பெறுபேறுகள் :

| *பாடம்* | *பெறுபேறு* | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1 | | 3 | |
| 2 | | 4 | |

03.

03.1 மேலதிக கல்வித்தகைமை :

| *தொடர் இல.* | *தகைமை* | *பெற்றுக்கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

03.2 ஆங்கில மொழியறிவு :

| *தொடர் இல.* | *தகைமை* | *பெற்றுக்கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

03.3 கணினியறிவு :

| *தொடர் இல.* | *தகைமை* | *பெற்றுக்கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

03.4 சமூக சேவை மற்றும் சமுதாய வேலைகள் பற்றிய அனுபவம் :

| *தொடர் இல.* | *தகைமை* | *பெற்றுக்கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

04. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு தரப்பட்டுள்ள விபரங்களனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், இங்கு தரப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என உறுதிப்படுத்தப்பட்டால் அது இப்பதவிக்கு என்னை தகைமையற்றவனாக்கும் எனவும், நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ அல்லது அது நடைபெறும் போதோ அல்லது அதன் பின்னரோ எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு எடுக்கப்படும் எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன் எனவும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

திகதி: …………………….                ……………………..

விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் ;

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………….. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேனென்றும் அவர் எனது முன்னிலையில் ………….. திகதியன்று தனது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி:…………………….

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்: ………………

பதவி: …………..

முகவரி: ……………………

(பதவிமுத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

நிறுவனத்தலைவரின் உறுதியுரை :

திரு./திருமதி/செல்வி …………………………………. அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். அவர் இத்திணைக்களத்தில்/அமைச்சில் நிரந்தர நியமனதாரியாக கடமையாற்றுவதாகவும் இப்பதவிக்கு உரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்தி செய்துள்ளார் எனவும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டுள்ளது/ எடுக்கப்படவில்லை என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் அறியத்தருகின்றேன்.

…………………………

திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்

திகதி:…………………….

பதவி: …………..

அமைச்சு/திணைக்களம்: ……………………

(பதவிமுத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

10-88

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

### சமூக சேவைகள் திணைக்களம்

### சைகை மொழிபெயர்ப்பாளர்/முன்பள்ளி ஆசிரியர்/ சமையல் உதவியாளர்/பணியாளர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தில் சைகை மொழி பெயர்ப்பாளர் பதவிகள் 16, முன்பள்ளி ஆசிரியர் பதவிகள் 07, சமையல் உதவியாளர் பதவிகள் 04 மற்றும் பணியாளர் பதவிகள் 05 தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை, "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி, II ஆவது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2025.11.10 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "சைகை மொழி பெயர்ப்பாளர்/முன்பள்ளி ஆசிரியர்/சமையல் உதவியாளர்/ பணியாளர் – தரம் III) தொடர்பிலான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத் தளத்தினூடாக மாதிரிப்படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

1. **சைகை மொழிபெயர்ப்பாளர் – பதவிகள் 16**

தலைமை அலுவலகம் - செவிப்புலனற்றோருக்கான மொழிபெயர்ப்பாளர் 01/தமிழ் மொழிபெயர்ப்பாளர் – 01.

தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – 01

அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – 01

சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – 01

கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – 01

மாதம்பே வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் – 01

மொணராகல மாவட்டச் செயலகம் – 01

நுவரெலியா மாவட்டச் செயலகம் – 01

அநுராதபுரம் மாவட்டச் செயலகம் - 01

பொலன்னறுவை மாவட்டச் செயலகம் – 01

இரத்தினபுரி மாவட்டச் செயலகம் – 01

திருகோணமலை மாவட்டச் செயலகம் – 01

அம்பாறை மாவட்டச் செயலகம் – 01

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் – 01

குருநாகல் மாவட்டச் செயலகம் - 01

1.1 **திறந்த ஆட்சேர்ப்பு :**

1.1.1 **வயது வரையறை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறை யாதவராகவும் மற்றும் 30 வயதுக்கு மேற் படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.2 **கல்வித் தமைமைகள் :**

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க..பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க. பொ.த. (உ.த.) பரீட்சையில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து). (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங் களில் (03) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் போதுமானது)

1.1.3 **தொழிற் தகைமைகள்:**

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத் தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப் பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்; அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தி னூடாக நடாத்தப்படும் ஒருவருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றி தழ் ; அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்கும் குறையாத சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்.

1.1.4 **அனுபவம் :**

தொடர்பற்றது

1.1.5 **உடற் தகுதிகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கை யில் எப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்று வதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்ட வராக இருத்தல் வேண்டும்.

1.1.6. பிற :

i. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

iii. பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினமன்று எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.1.7. **ஆட்சேர்ப்பு முறைமை :**

எழுத்துமூல மற்றும் தொழில்முறை பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.7.1 ***எழுத்துமூலப் பரீட்சை* :**

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.1.7.2 ***தொழில்முறை பரீட்சை*** : சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல்.

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.1.8 ***பொதுவான நேர்முகப் பரீட்சை*** – பதவிக்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்காகச் சான்றிதழினைப் பரீட்சித்தல். (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

1.1.9 ***சம்பள அளவுத் திட்டம்*** :

பொ.நி.சு 10/2025 பிரகாரம் MN 02 -2025 சம்பள அளவு ரூ. 48,470 - 10 x 540 - 11x 630- 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 82,800.00 ஆகும்.

(இச் சம்பள அளவு 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.)

1.1.10 **குறிப்பு :**

எழுத்துமூல மற்றும் தொழில்முறை பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் தொழில்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அவ் வேளையில் பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும், பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்துமூல மற்றும் தொழில்முறை பரீட்சை இரண்டிலும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறன் ஒழுங்குமுறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.11. **சேவை நிபந்தனைகள்** :

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியப் பங்களிப்புக்களினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அதனுடன் தொடர்பிலான சுற்று நிருபங்களின் பிரகாரம் மூன்று வருடங்களின் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 **வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு :**

1.2.1 **கல்வித் தகைமைகள்** :

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

1.2.2 **தொழிற் தகைமைகள்** :

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒருவருட சைகை மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்கும் குறையாத சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமாச் சான்றிதழ்.

1.2.3 **அனுபவம்**:

சமூக சேவைகள் திணைக்களத்தின் பராமரிப்பாளர் அல்லது விடுதிக்காப்பாளர் பதவியொன்றில் 05 வருடத்திற்கும் குறையாது செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலப் பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

1.2.4 **உடற் தகுதிகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.2.5 **பிற** :

i. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

ii. தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருடக் காலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

iii. பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினமன்று எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.2.6 **வயது** : தொடர்பற்றது.

1.2.7 **ஆட்சேர்ப்புத் திட்டம்:**

எழுத்து மூல மற்றும் தொழில்முறை பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.2.7.1. ***எழுத்துமூலப் பரீட்சை*** :

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித் திறன் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.2.7.2. **தொழில்முறைப் பரீட்சை :**

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக் கூடிய மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| சைகை மொழியின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.2.8 **பொதுவான நேர்முகப் பரீட்சை :** பதவிக்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்காகச் சான்றிதழினைப் பரீட்சித்தல். (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

1.2.9. **குறிப்பு :**

எழுத்துமூல மற்றும் தொழில்முறை பரீட்சையொன்றினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் தொழில்முறை பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அவ் வேளையில் பொதுவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும், பொதுவான நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்துமூல மற்றும் தொழில்முறை பரீட்சை இரண்டிலும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறன் ஒழுங்குமுறையின் பிரகாரம். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.2.10. **சேவை நிபந்தனைகள் :**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியப் பங்களிப்புக்களைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்று நிருபங்களின் பிரகாரம் மூன்று வருடங்களின் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**02. முன்பள்ளி ஆசிரியர் (07 பதவிகள்)**

சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம் – 03
கொட்டாவ சிறுவர் வழிகாட்டல் நிலையம் – 03
நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம் - 01

**2.1 வயது வரையறை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையொதவராகவும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**2.2 கல்வித் தகைமைகள்** :

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்த வகையில் ஒரு பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

**2.3. தொழில்முறை தகைமைகள்** :

அரசின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றி லிருந்து முன்பள்ளிக் கல்வி தொடர்பில் 03 மாதங்களுக்கும் குறையாத பாடநெறி யொன்றினைத் தொடர்ந்து சான்றிதழொன் றினைப் பெற்றிருத்தல்.

**2.4 அனுபவம் :**

தொடற்பற்றது.

**2.5 ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துமூலப் பரீட்சையின் இரண்டு வினாத் தாள்களிலும் சித்திபெற்று, ஆகக்கூடிய புள்ளி களினைப் பெறும் தகைமைகளினைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

2.5.1 **எழுத்துமூலப் பரீட்சை** :-

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**2.6. சம்பள அளவுத் திட்டம்** :

பொ.நி.சு. 10/2025 இன் பிரகாரம் MN 01 - 2025 சம்பள அளவுத்திட்டம் ரூ. 45,230.00 - 10X540- 11 X 630 - 10 X 890 - 10 X 1,190 - ரூபா 78,360.00 ஆகும்.

(இச்சம்பள அளவுத்திட்டம் 2027.01.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்)

**2.7. சேவை நிபந்தனைகள் :**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியப் பங்களிப்புக்களினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அதனுடன் தொடர்பிலான சுற்றுநிருபங்களின் பிரகாரம் மூன்று வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**2.8 குறிப்பு :**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாகக் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

**3. சமையல் உதவியாளர் (04 பதவிகள்)/பணியாளர் (05 பதவிகள்) :**

**சமையல் உதவியாளர் - 04**

வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - 01
பட்டுகம்மன வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - 01
கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - 01
மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் - 01

**பணியாளர் – 05**

ரிதியகம கலன புகலிடம் (பணியாளர்) – 02
சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் (பணியாளர்) – 01
மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் (பணியாளர்) – 01
கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம் (பணியாளர்) - 01

3.1 **வயது வரையறை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்குக் குறையைாதவரா கவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.2 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை யில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

3.3 **தொழில்முறை தகைமைகள்** :

**சமையல் உதவியாளர் :**

அரசின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றி லிருந்து சமையற் கலை தொடர்பிலான 03 மாதங்களுக்கும் குறையாத பாடநெறியினைத் பயின்று சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

**பணியாளர் :**

அரசாங்க மருத்துவமனை, மருந்தகம் அல்லது சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரத்தியேக மருத்துவமனை யொன்றில் செவிலியர் பராமரிப்பில் பயிற்சி பெற்றிருத்தல். (சான்றிதழினூடாக உறுதிப் படுத்துதல் வேண்டும்.)

3.4 **அனுபவம் :**

பதவிக்கான துறையின் அனுபவம் விசேட தகைமையொன்றாகக் கருதப்படும்.

3.5 **ஆட்சேர்ப்பு முறை :**

அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிலிருந்து, நிலவும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப் படும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

3.6. சம்பள அளவுத் திட்டம் :

பொ.நி.சு.10/2025 இன் பிரகாரம் PL 1 -2025 சம்பள அளவுத்திட்டம் ரூ. 40,000 - 10 x 450 - 10x 490-10 x 540 - 12 x 590 - ரூபா 61,880.00 ஆகும்.

(இச் சம்பள அளவுத்திட்டம் 2027.01.01 தொடக்கம் அமுலாக்கப்படும்)

3.7. சேவை நிபந்தனைகள் :

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓங்வூதியத் திட்டத்திற்கு பங்களிப் புக்களினைச் செலுத்துதல் வேண்டும். அரசினூடாக அவ்வப்போது விதிக்கப்படும் முறைமைக்கமைவாக தங்களினால் அது தொடர் பிலான பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

3.8 **குறிப்பு :**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், உரிய வெற்றிடங்களைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாகக் கடமை யாற்றியிருத்தல் வேண்டும்.

தர்சனீ கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 ஆவது மாடி,
கட்டம் II,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2025, ஒற்றோபர் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு**

**சமூக சேவைகள் திணைக்களம்**

**சைகை மொழிபெயர்ப்பாளர்/முன்பள்ளி ஆசிரியர்/சமையல் உதவியாளர்/பணியாளர் (தரம் III)**

…………......................................... பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

மொழி ஊடகம் [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :.................................................................................................

02. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :.................................................................................................
.................................................................................................

03. முகவரி :.................................................................................................

04. தொலைபேசி இலக்கம் :.................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : .................................................................................................

06. பிறந்த திகதி : .................................................................................................

07. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் :......................, மாதங்கள்:.......................................... நாட்கள்:...............

08. திருமணமானவர்/திருமணமாகாதவர் :.................................................................................................

09. பால் : (பெண்/ஆண்) :.................................................................................................

10. கல்வித் தகைமைகள் :

1. க.பொ.த. (சாதாரண தரம்)

முதலாவது அமர்வு : இரண்டாவது அமர்வு :

வருடம் : ………. பரீட்சைச் சுட்டெண்: …………….. வருடம் : ………. பரீட்சைச் சுட்டெண்: ……………..

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. க.பொ.த. (உயர் தரம்)

முதலாவது அமர்வு : இரண்டாவது அமர்வு :

வருடம் : ………. பரீட்சைச் சுட்டெண்: …………….. வருடம் : ………. பரீட்சைச் சுட்டெண்: ……………..

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. தொழில்முறை மற்றும் பிற தகைமைகள் :

| *பாடநெறியின் பெயர்* | *நிறுவனம்* | *பாடநெறியின் காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

12. அனுபவம் :

........................................................................................................................................................................................
........................................................................................................................................................................................
........................................................................................................................

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் சான்று பகர்கின்றேன்.

...........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :..................

10-147

---

## திருத்தம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியினை நீடித்தல்

இலக்கம் 2445 மற்றும் 2025.07.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த மாத்தறை மாவட்டத்துக்குரிய அனைத்து முஸ்லிம் மற்றும் மேலதிக விவாகப் பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2025.10.30 ஆந் திகதி வரை நீடிப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிபிட்டிய | வெலிகம கோரளை பிரிவின் வட்ட கெதரமுல்ல பிரதேசத் தின் முஸ்லிம் விவாகம் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |
| மாத்தறை | வெலிகம | கல்பொக்க பிரிவின் முஸ்லிம் விவாகம் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |
| மாத்தறை | அக்குரெஸ்ஸ | வெலிகம கோரளை பிரிவின் மேலதிக விவாகம் (சாதாரண) முஸ்லிம் விவாகம் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

02. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே அதிகாரம் செலுத்தப்படுவதாக தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

10-164

## இலங்கைப் பாராளுமன்றம்

### ஊடக அலுவலர் (தமிழ்) பதவி

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியில் உள்ள ஊடக அலுவலர் பதவிக்கு (தமிழ்) சிறந்த தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் “பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே” எனும் முகவரிக்கு 2025, ஒற்றோபர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்).

ஊடக அலுவலர் பதவி (தமிழ்) (வெற்றிடமாயுள்ள பதவிகளின் மொத்த எண்ணிக்கை 01)

1. **தொழில் தொடர்பான விபரம் :** ஊடகப் பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவத்திற்கான உதவிப் பணிகளை நிறைவேற்றுதல்.
2. **சம்பள அளவுத்திட்டம்:** 04/2025 ஆம் இலக்க 2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கான மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 58,660.00 -9 x 1190 - 3 x 1360 - ரூ. 73,450.00 (அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கலாக, இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த மாதாந்த ஆரம்ப ஊதியம் அண்ணளவாக ரூ. 100,000.00) ஆகும்.
3. **வயதெல்லை :** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 முதல் 35 வயதுக்கு இடைப் பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. **கல்வித் தகைமைகளும் அனுபவமும் :**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பல்லூடகக் கலை/கட்புலத் தொடர்பாடல் வடிவமைப்பில் கட்புலக் கலை (சிறப்பு) இளமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கலைமாணிப் பட்டத்தை (தொடர்பாடல்/ வெகுசனத் தொடர்பாடல்/ வெகுசன ஊடகம்/ பொதுமக்கள் உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம்/ தொடர்பாடல் மற்றும் ஆக்கக் கலைகள்/சமூகவியல் / அரசியல் விஞ்ஞானம் ஒரு பாடமாகக் கொண்ட) பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் ஊடகவியல் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   ஊடகவியலில் அல்லது வெகுசனத் தொடர்பாடலில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருக்கவும் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை:** எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

   பாராளுமன்றச் செயலாளர் நாயகம் நியமிக்கும் குழாமினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பின்வரும் தெரிவடிப்படைகளைக் கருத்திற்கொண்டு, புள்ளிகள் வழங்கப்படும். ஆகக்கூடிய புள்ளிகள் 100.

| *தொடர் இலக்கம்* | *தெரிவடிப்படை* |
|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2 | மொழி மற்றும் தொடர்பாடல் திறன்கள் |
| 3 | கணினி அறிவு |
| 4 | உரிய துறையில் அறிவு மற்றும் வேலை அனுபவம் |
| 5 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப் படும் ஆளுமை மற்றும் செயலாற்றுகை |

6. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

   (i) இந்தப் பதவி நிரந்தரமானதாகும். இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய நிர்ணயிக்கப்படும். முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் ஒரு நிரந்தரப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கு ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பாராளு மன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் தொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நியமிக்கப் படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் (மூலப்பிரதிகள் அல்ல). மூலப் பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்;
(இ) தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்;
(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்.

8. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்று கின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

9. ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்குச் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

10. வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் தவறானது எனக் கண்டறியப்பட்டால், அவர் தகைமை யற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற அல்லது உரிய கல்வித் தகைமைகளினதும், அனுபவம் பற்றிய சான்றிதழ் களினதும் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள்) நிராகரிக்கப்படும். திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்ற போதிலும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

சமிந்த குலரத்ன,
பதில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025, ஒற்றோபர் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**ஊடக அலுவலர் பதவி (தமிழ்)**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :....................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்): ...............................................................
.............................................................................................................................................
...................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு./திருமதி/செல்வி)
.............................................................................................................................................
.............................................................................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி :.............................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி :...........................................................................................................................
...........................................................................................................................
...........................................................................................................................

தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

(இ) தயவுசெய்து அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக:
தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:…………………………………………..
(பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:......................... மாதங்கள்:....................... நாட்கள்: ...............................

05. சிவில் அந்தஸ்து (விவாகமானவர்/விவாகமாகாதவர்) :...........................................................................

06. பால் நிலை (ஆண்/பெண்) :.........................................

07. இலங்கைப் பிரசையா என்ற விபரம் (ஆம்/இல்லை) :...........................................................................

08. உயர் கல்வித் தகைமைகள்: (விடயக் குறிப்புடன் பட்டச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) (தயவுசெய்து உரிய பெட்டியினுள் (✓) என அடையாளமிடுக)

| பட்டம் | | பல்கலைக்கழகம் | ஆண்டு |
|---|---|---|---|
| (அ) பல்லூடகக் கலையில் கட்புலக் கலை (சிறப்பு) இளமாணிப் பட்டம் | ☐ | ...................................... | .............................. |
| (ஆ) கட்புலத் தொடர்பாடல் வடிவமைப்பில் கட்புலக் கலை (சிறப்பு) இளமாணிப் பட்டம் | ☐ | ...................................... | .............................. |
| (இ) பின்வரும் பாடங்களில் ஒரு பாடம் அடங்கலாக கலைமாணிப் பட்டம்: | | | |
| • தொடர்பாடல் | ☐ | ...................................... | .............................. |
| • வெகுசனத் தொடர்பாடல் | ☐ | ...................................... | .............................. |
| • வெகுசன ஊடகம் | ☐ | ...................................... | .............................. |
| • பொதுமக்கள் உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவம் | ☐ | ...................................... | .............................. |
| • தொடர்பாடல் மற்றும் ஆக்கக் கலை | ☐ | ...................................... | .............................. |
| • சமூகவியல் | ☐ | ...................................... | .............................. |
| • அரசியல் விஞ்ஞானம் | ☐ | ...................................... | .............................. |
| (ஈ) ஊடகவியலில் இளமாணிப் பட்டம் | ☐ | ...................................... | .............................. |

மேலதிக கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………

09. தொழில் அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

10. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ...................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி: ...................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி: ....................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்: ..................................................................................

(உ) கொடுப்பனவுகள்: ....................................................................................................

(ஊ) முழுமொத்தச் சம்பளம்: ..........................................................................................

11. ஒரு குற்றவியல் குற்றத்திற்கு நீங்கள் ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கணிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை)
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக: ..............................................................................................

12. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? ( ஆம் / இல்லை)
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக: ...................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள எல்லா விபரங்களும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் விபரம் நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பொய்யானது அல்லது தவறானது என கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் அல்லது நான் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எந்தவித நஷ்டஈடுகளும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி: ............................ ……..................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில் .................................................................................. என்ற பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ........ ..................................................................................... என்பவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து அனுப்பி வைக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை அத்துடன் இவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானது மற்றும் இவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாக்கப்படவில்லை அல்லது அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எடுக்கும் அபிப்பிராயம் இல்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்படமாட்டார் (தயவுசெய்து பொருத்தமான சொற்களை கீறிவிடுக).

திகதி: ................................... ......................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரை)

10-182

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை –2016 (2025)

## First Efficiency Bar Examination for Statisticians of the Department of Census & Statistics – 2016 (2025)

1. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபரவியலாளர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2026, சனவரி மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப் படுகிறது. விண்ணபப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் “எங்கள் சேவை” என்ற பிரிவில் “இணைய விண்ணபப்பங்கள் – ஆட்சேர்ப்புத் தேர்வுகள்/E. B. தேர்வுகள்” என்ற பிரிவில் கிடைப்பதுடன், விண்ணப்பங்களை இணைவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்வது ஒற்றோபர் 13 ஆந் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி, 2025, நவெம்பர் 07 ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பம் இணையவழியூடாக வெளியிடப்பட்டதும், அதைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையால் நிரப்பி, விண்ணபதாரரின் கையொப்பம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப் பத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

• குறிப்பு:

இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப் பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

2. (i) இப் பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்த மானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப் படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 300.00 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். பரீட்சைக் கட்டணங்களை ஒன்லைன் முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கிரெடிட் கார்டு மூலமாகவும்;
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி டெபிட் கார்டு மூலமாகவும்;
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறை மூலம்;
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூல மாகவும்.

• குறிப்பு:

(அ) மேற்கூறிய முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறி வுறுத்தல்களின் கீழ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டண பற்றுச்சீட்டு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட் சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும், மேலும் பரீட்சைக் கட்டணத்தை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற் கூறிய கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் திரும்பப் பெறப் படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப் படவோ முடியாது.

4. ஒன்லைன் பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் ஒன்லைனில் சமர்ப்பித்த மென் பிரதியையும் பதிவுத் தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதியையும் பரீட்சைகள் திணைக்களம் பெற்றுக்கொண்டதும், மென் பிரதி மற்றும் அச்சுப்பிரதி சரிபார்க்கப்பட்டு, திணைக்களத் தால் செல்லுபடியாகும் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வது/ஏற்றுக்கொள்ளாதது குறித்த அறிவிப்பு முறைமையை அணுகப் பயன்படுத்தப்படும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS வழியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பப்படும். ஒன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத் தல்களைப் பதிவிறக்கவும். விண்ணப்பத்தை நிரப்பும் போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்ற வும். அச்சுப் பிரதியைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படாது. முழுமையற்ற விண்ணப் பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். விண்ணப் பத்தின் அச்சுப் பிரதி ‘பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை’ என்ற முகவரிக்கு திணைக்களத் தலை வரினால் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

I. ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
II. செல்லுபடியான கடவுச் சீட்டு;
III. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்ப தாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும்,பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை யுடைவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல், திணைக்களத் தலைவரின் சான்றுரை என்பன சகிதம் சரியாக நிரப்பி அனுப்பிய பரீட்சார்த்திகளிற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அங்கு விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றை குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றை கைவசம் வைத்திருத்தல் முக்கியமானது. அந்த விசாரணையில், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவை சரியாகக் குறிப்பிடப்பட வேண்டும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது நல்லது.

7. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது, நிறுவனத் தலைவர் மூலம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், பரீட்சைக்கு தோற்றிய முதல் நாளிலே பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுபடுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடனான உத்தியோகத்தர்களுக்கு முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களுக்கு திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும்.

பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. தமக்கு உரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்த வராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழிமூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணபித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

11. **பரீட்சைப் பாடத்திட்டம் :**

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ்க் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்திப் புள்ளி* |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 02 மணி. | 100 | 40% |
| 2. அரச துறை நிதி முகாமைத்துவம் | 02 மணி. | 100 | 40% |
| 3. ஆங்கிலம் | 02 மணி. | 100 | 40% |
| 4. பிரயோகப் புள்ளிவிபரம் | 03 மணி. | 100 | 40% |

(01) நிர்வாகம் (பாட இல. 01)

பகுதி I - நிர்வாகம்
பகுதி II - அலுவலக, வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் ஒழுங்கமைப்பு முறைகள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபனவிதிக் கோவையின் பின்வரும் அதிகாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக் கப்படும்.VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

- வினாத்தாளின் கட்டமைப்பு :
  - a) ஒரு பகுதிக்கு நான்கு வினாக்கள் வீதம் வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப் பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - b) I, II பகுதிகளில் குறைந்தபட்சம் இரண்டு வினாக்கள்வீதம் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(02) அரச துறை நிதி முகாமைத்துவம் (பாட இல. 02) நிதி ஒழுங்குவிதிகள் கீழ் காட்டப்பட்ட அதிகாரங்கள்

I - சகல பிரிவுகளும்
II - சகல பிரிவுகளும்
III - சகல பிரிவுகளும்
IV - சகல பிரிவுகளும்
V - 1, 2, 3, 4 ஆம் பிரிவுகள்
VI - சகல பிரிவுகளும்
VII - 1, 2, 3, 4 மற்றும் 6 ஆம் பிரிவுகள்

- வினாத்தாளின் கட்டமைப்பு :
  - a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான ஆறு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக் கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(03) ஆங்கிலம் (பாட இல. 03)

**English Grammer**

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/ Compound/ Complex/ Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

**Writing Skills**

The Knowledge on the modern formats and styles of writing is tasted in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/ Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Meeting Minutes/ Agendas/ Invitations
- Comprehension

**Reading Skills**

Candidate's ability to comprehend a printed text; infer meaning and verbal/ written interpretation is expected.

* Reading and understanding the specific and general meaning of the printed text.
* Reading and interpretation (Verbal/ Written)
* Understanding the Cohesion and coherence of a passage.

• வினாத்தாளின் கட்டமைப்பு :

a) வினாத்தாள் பின்வரும் விடயங்கள் சம்பந்தப் பட்ட வினாக்களை கொண்டுள்ளது.

I. இலக்கணம்
II. கிரகித்தல்
III. மரபுத்தொடர்
IV. கட்டுரை

b) சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(04) பிரயோகப் புள்ளிவிபரம் (பாட இல. 04)

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத் தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக் குகள், தகவல் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகைமதிப்பு மற்றும் மக்களியல், விலைச் சுட்டெண்கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

• வினாத்தாளின் கட்டமைப்பு :

a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான எட்டு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்ட மைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.

b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.

11.1 உத்தியோகத்தர்கள் சித்தி எய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் எடுத்தல் வேண்டும் என்பதுடன் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிற் சித்தி எய்துவதற்கு சகல பாடங் களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பதாரர்களுக்கு வசதியுண்டு.

12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

13. இவ் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் அல்லாத வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே அதிகாரபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

"சங்கியான மந்திரய",
306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

10-96

---

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I, II மற்றும் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2024(II)

1.0. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சை, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆவது வினைத்திறன்கான் தடை தாண்டல் பரீட்சை - 2024 (II) (சேவைப் பிரமாணத்தின் பந்தி 10) பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2025, திசெம்பர் மாதம் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்பட்டுகின்றது.

2.0. இப் பரீட்சைகள் 1774/31 மற்றும் 2012.09.07 ஆம் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்படி நடைபெறும்.

3.0. மேற்கூறிய சேவையில் ஒவ்வொரு தரத்துக்கும் ஏற்புடைய வகையில் நடாத்தப்படவுள்ள வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள் பின்வருமாறு.

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டுப் பெயர்* |
|---|---|---|
| 01. | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2024 (II) (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கு) | CSDOS - I |
| 02. | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2024(II) (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கு) | CSDOS - II |
| 03. | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2024(II) (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கு) | CSDOS - III |

4.0. இப் பரீட்சை தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டவிதிகளுக்கு பரீட்சாத்திகள் உட்படுவர். இந்த விதிகளை மீறினால், ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

5.0. இப் பரீட்சைக்கு இணையத்தளத்தின் மூலம் நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப்பக்கத்தில் மேலே காணப்படும் “Apply for Examinations” எனும் நீட்சியின் மூலமாகவோ அல்லது நேரடியாக http://examinationportal.slida.lk/ க்கு பிரவேசிப்பதன் மூலம் உங்களுக்கான பயனர் கணக்கொன்றை (User Account) ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன் அதன் பிறகு பரீட்சை விண்ணப்பத்தினை நிரப்பிக் கொள்ள முடியும். நிகழ்நிலை (Online) விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டும்.

2025.10.10 ஆம் திகதி மு.ப 8.00 மணி முதல் 2025.10.31 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை மட்டுமே பரீட்சை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியும்.

5.1 இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நகரம் மற்றும் நகர இலக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| குருநாகல் | 10 |
| புத்தளம் | 11 |
| அனுராதபுரம் | 12 |
| பொலன்னறுவை | 13 |
| கேகாலை | 14 |
| இரத்தினபுரி | 15 |
| பதுளை | 16 |
| மொணராகலை | 17 |
| திருகோணமலை | 18 |
| மட்டக்களப்பு | 19 |
| அம்பாறை | 20 |
| வவுனியா | 21 |
| மன்னார் | 22 |
| முல்லைத்தீவு | 23 |
| கிளிநொச்சி | 24 |
| யாழ்ப்பாணம் | 25 |

மேற் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்துக்காக போதுமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காது விடின் அப் பரீட்சை நிலையம் இரத்து செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரர்கள் அருகிலுள்ள நகரத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்துக்கு மாற்றப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

6.0. i. **பரீட்சைக் கட்டணம்** : முதல் முறையாக இப் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களால் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை. இருப்பினும், அதற்கடுத்த அமர்வுகளில் உத்தியோகத்தர்களால் ஒரு பாடத்துக்கு ரூ 250.00 வீதம் செலுத்தப்பட வேண்டும்.

ii. பரீட்சை கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும்.

**கணக்கின் பெயர்** : செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**கணக்கு இலக்கம்** : 310100119027430
**வங்கி :** மக்கள் வங்கி – பம்பலப்பிட்டி கிளை

iii. அந்த கட்டணத்தை செலுத்தியமைக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் இலக்கத்தை தொடர்புடைய பணம் செலுத்தும் பத்திரத்தின் இலக்கம் விண்ணப்பத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என்பதுடன் மேலும், பற்றுச்சீட்டின் புகைப்படம் ஒன்றையும் பரீட்சை விண்ணப் பத்தில் குறித்த இடத்தில் பதிவேற்றம் (Upload) செய்யப்பட வேண்டும்.

iv. மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது, பணம் செலுத்துபவராக விண்ணப்பதாரரின் பெயர், தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம், பணம் செலுத்தும் காரணம் மற்றும் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டிலக்கம் என்பவறை குறிப்பிட்டு பணம் செலுத்தும் பற்றுச்சீட்டை பூர்த்தி செய்ய வேண்டும். நிகழ்நிலையில் (Online) பணம் செலுத்தும் உத்தியோகத்தர்களும், பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டில் மேற்குறிப்பிட்ட தகவல்களை குறிப்பிட வேண்டும்.

(பரீட்சைகளின் குறியீட்டுப் பெயர்கள் பந்தி 03 இல் காட்டப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்)

7.0. நிகழ்நிலை முறையில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரரிடம் செயலில் உள்ள மின்னஞ்சல் முகவரி (e-mail) மற்றும் தொலைபேசி இலக்கம் காணப்படுவது கட்டாயமானதாகும். (ஒரு மின்னஞ்சல் முகவரி, ஒரு பயனர் கணக்கிற்கே பயன்படுத்த முடியும்.) விண்ணப்பத்தை நிகழ்நிலை முறையில் அனுப்பிய பின்னர், அது கிடைக்கப் பெற்றமையை உறுதிப்படுத்தும் தகவலொன்று மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்படும்.

பரீட்சை அனுமதி அட்டை வெளியானதும், நீங்கள் வழங்கிய கைபேசி எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) மூலம் அதைப் பற்றி அறிவிக்கப்படும். பின்னர், உங்கள் பயனர் கணக்கில் உள்நுழைந்து பரீட்சை அனுமதி அட்டையை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.

விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கையடக்க தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி பரீட்சை நடவடிக்கைகள் முடியும் வரை செயலில் இருக்க வேண்டும் என்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். கையடக்க தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை மாற்றப் படுவதால் ஏற்படும் சிரமங்களுக்கு விண்ணப்ப தாரர்களே பொறுப்பாளிகள் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

8.0. நிகழ்நிலை முறையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் செயன்முறை தொடர்பில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கல் எழுந்தால், அது தொடர்பிலான விசாரணை களுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறு வகத்தின் தொழில்நுட்பப் பிரிவின் 011-4513368 மற்றும் 011-4513366 என்ற தொலைபேசி இலக்கமும், ஏனைய அனைத்து விசாரணைகளுக்கும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவின் 011-2691062, 011-2696211 (நீட்சி – 156/606) ஆகிய தொலைபேசி இலக்கமும், 2025.10.10 ஆம் திகதி முதல் 2025.10.31 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 8.30 முதல் பி.ப 4.30 வரை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

9.0. பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை வைத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பரீட்சைக்கு வருகை தருவதற்கான பிரயாணச் செலவுகள் எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

10.0. பரீட்சார்த்திகளின் அடையாளம் - பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தி யடையும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கு, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற் பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேற்படி ஆவணமொன்றை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தி தன்மை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்து செய்யப்படலாம்.

11.0. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடைபெறுவதோடு உரிய சேவைக்கு நுழைவதற்கு பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் உத்தி யோகத்தர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களும் தாம் கல்வி கற்ற மொழி மூலத்திலோ அல்லது அரசகரும மொழியொன்றிலோ இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப் பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

12.0. உத்தியோகத்தர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றலாம்.

13.0. பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு வெளியிடப்பட்ட பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அப்பெறுபேறுகள் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அப் பெறுபேறுகளின்படி, குறித்த திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்களது சேவையை உறுதிப்படுத்தல் மற்றும் பதவி உயர்வு நடவடிக்கைகளுக்காக பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

14.0. பரீட்சை நடைமுறை: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கும் தோற்றக்கூடிய உத்தி யோகத்தர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத் திட்டங்கள் பின்வருமாறு :

14.1 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2024(II)

14.1.1 ***தகைமைகள்:*** இணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இந்தத் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்படாத ஆயினும் உள்ளீர்ப்புச் செய்யப்பட விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பெறுவார்கள்.

14.1.2 பாடப்பரப்பு

| *பாடம்* | *பாட இலக்கம்* | *இலக்கம்* | *நேரம்* | *சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| அலுவலக முறைமைகள் | 01 | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| கணக்கீட்டு முறைமைகள் | 02 | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| கணினிப் பயன்பாடு | 03 | 100 | 02 மணித்தியாலங்கள் | 40% |

❖ அலுவலக முறைமைகள்:

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவு மற்றும் அந்த அறிவை பிரயோக ரீதியில் பயன்படுத்துவதற்கான திறன், கடமைசார் ஆவணங்களை நன்கு விளங்கி தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புகள் மூலம் தங்கள் கருத்துக்கள்/ அவதானிப்புகளை உறுதியான முறையில் முன்வைக்கும் திறன் மற்றும் கட்டளையின்படி ஒரு கடிதத்தை வரைவாக்கும் திறன் என்பன பரீட்சிக்கப்படும். (கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி - கட்டமைக் கப்பட்ட வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்).

❖ கணக்கீட்டு முறைமைகள் :

இதன் மூலம் அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அடிப்படை கணக்குகள் மற்றும் நிதி நிர்வாகப் புத்தகங்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கம் மற்றும் அறிவை அளவிட எதிர்பார்க்கப்படுகிறது. (கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி-கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்).

❖ கணினிப் பயன்பாடு :

(i) தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்
(ii) விண்டோஸ் தொழிற்பாட்டு முறை
(iii) கோவை முகாமை
(iv) சொல் உள்ளீடு

அடிப்படை திறன்கள், திரை பற்றிய பரீட்சயம், வசனங்களில் திருத்தங்கள் செய்தல், வசன அமைவிடம், எழுத்துரு மற்றும் பண்புகள், துணைப்பந்திகள், பந்திகள், வரிகளுக்கிடையிலான இடைவெளிகளை மாற்றுதல், பாய்புள்ளி அமைப்பு (Tab Setting), வாசகங்களைத் தேடுதல் மற்றும் மாற்றீடு செய்தல், எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப் பிழைகள், ஒத்த சொற்களைக் கொண்ட நிரல்களைப் பயன்படுத்தல், பக்க அமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், வரிசைப்படுத்துதல், கோவை முகாமை, ஆவணமொன்றை பல முகவரிகளுக்கு அனுப்புதல், மெக்ரோ பயன்பாடு

(v) விரிதாள்கள்

அடிப்படை திறன்கள், வடிவமைத்தல் (Formatting), திருத்துதல், நிரல்களும் வீச்சும், புதிய செருகல்கள் மற்றும் நீக்குதல்கள், தரவுகளை வகைப்படுத்தல், வரைபுகளை

உருவாக்குதல், அச்சிடுதல், @ செயற்பாடு (@ Function), மெக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை.

(vi) தரவுத்தளம்
அறிமுகம் செய்யும் அடிப்படைத் திறன்கள்
தரவுத்தொகுதிகளின் உருவாக்கமும் பயன்பாடும்
படிவங்கள்
தொடர்புபட்ட படிவங்கள், தோன்றும் படிவங்கள்(popup forms)
உரையாடல் மற்றும் தகவல் பெட்டிகள்
விசாரணைகள்
வகைப்படுத்தல்
அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்
மெக்ரோ பயன்பாடு

(vii) நிகழ்த்தல் காட்சி / ஓவியக் குறிப்புக்கள்
அடிப்படைத் திறன்கள், திருத்தங்கள் செய்தல், வடிவமைத்தல், வடிவங்களைப் பிரயோகித்தல் படங்கள், வரைபடங்கள் மற்றும் வரைபுகளைச் செருகுதல், படவில்லைகளும் விளைவு அசைவூட்டிகளும், உருவ வடிவமைப்பு, நிகழ்த்துக் காட்சிக் கருவிகளைப் பயன்படுத்துதல், முதன்மைகளைத் (Master) தயாரித்தல், படவில்லைகளையும் குறிப்புக்களையும் அச்சிடுதல்

(viii) இணையம்
இணையம் பற்றிய அறிமுகம், சர்வதேச வலையமைப்பு, தேடல் முறை, நடைமுறை இணையம்

(ix) மின்னஞ்சல் (E –Mail)
அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின் அஞ்சலைப் பெறுதல், மின்னஞ்சல் அனுப்புதல், அதற்குப் பதிலளித்தல், இணைப்புக்களின் பயன்பாடு, முகவரியைக் கண்டறிவதற்கு சுருக்கப் பெயர்களைப் பயன்படுத்துதல், தகவல் தயாரித்தல்

(பல்தேர்வு, கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி-கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

14.2. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை -2024 (II)

14.2.1 தகைமைகள் – இணைந்த சேவைக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இன் அலுவலர் இப் பரீட்சையில் தோற்ற தகைமை பெறுகின்றார்கள்.

(i) இணைந்த சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

(ii) இணைந்த சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படாத, ஆயினும் உள்ளீர்ப்புச் செய்யப்பட விருப்பத்தை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்கள்.

14.2.2 பாடப்பரப்பு

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *நேரம்* | *சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள் | 04 | 100 | 02 மணித்தி யாலம் | 40% |
| நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரச கொள்வனவுச் செயன்முறை | 05 | 100 | 02 மணித்தி யாலங்கள் | 40% |

(மேலே உள்ள இரண்டு வினாப்பத்திரங்களிலும் பகுதி I கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். பகுதி II, 08 கட்டுரை வினாக்களைக் கொண்டது. 04 வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும்.)

❖ தாபன விதிக்கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள்

தாபனவிதிக்கோவையின்அத்தியாயங்கள் VI, VII, VIII, XII, XIII, XIV, XVII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள்

❖ நிதிஒழுங்குவிதிகள் மற்றும் அரச கொள்வனவுச் செயன்முறை

அத்தியாயங்கள் I, II, III, IV, V மற்றும் அரச கொள்வனவுச் செயன்முறை

14.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2024(II)

14.3.1 தகைமைகள் - இணைந்த சேவைக்குறிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I இன் அலுவலர் இப் பரீட்சையில் தோற்ற தகைமை பெறுகின்றார்கள்.

14.3.2 பாடப்பரப்பு

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *நேரம்* | *சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமை | 06 | 100 | 03 மணித்தியாலங்கள் | 40% |

❖ செயற்திட்ட முகாமை
(i) செயற்திட்டம் பற்றிய வரைவிலக் கணம்
(ii) செயற்திட்ட முகாமை
(iii) செயற்திட்டச் சக்கரம்
(iv) செயற்திட்டத் தயாரித்தலும் விபரித் தலும்
(v) செயற்திட்ட மதிப்பீடு
* மீளச் செலுத்தும் காலம்
* நிகர நிகழ்காலப் பெறுமதி
* உள்ளகப் பயன் வீதம்
* செலவுப் பயன் வீதம்
* வருடாந்தப் பொதுப் பயன் வீதம்
(vi) செயற்திட்ட ஒழுங்கமைப்பு
(vii) நிழல் விலையைப் பயன்பாடு

15.0 இந்தப் பரீட்சை அறிவிப்பில் ஏற்பாடுகள் செய்யப் படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது.

16.0 இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அப்போது சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியாகும்.

என்.யூ. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் 02.

10-114

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பொருட்டான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2016(2025)**

**Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census & Statistics -2016(2025)**

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2026 சனவரி மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் “எங்கள் சேவை” என்ற பிரி வில் “இணைய விண்ணப்பங்கள் - ஆட்சேர்ப்புத் தேர்வுகள்/E. B. தேர்வுகள்” என்ற பிரிவில் கிடைப்ப துடன், விண்ணப்பங்களை இணையவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2025, ஒற்றோபர் 13 ஆந் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி, 2025, நவெம்பர் 07 ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பம் இணையவழியூடாக வெளியிடப்பட்டதும், அதைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையால் நிரப்பி, விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

- குறிப்பு:

இறுதித் தேதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

02. (i) இப் பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்த மானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே அமர்வில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 250.00 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். பரீட்சைக் கட்டணங்களை ஒன்லைன் முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கிரெடிட் கார்டு மூலமாகவும்
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடன் கூடிய எந்தவொரு வங்கி டெபிட் கார்டு மூலமாகவும்
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறை மூலம்
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூலமாகவும்

- குறிப்பு:

(அ) மேற்கண்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது குறித்த அறிவுறுத்தல்கள்பரீட்சைதொடர்பானதொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டண பற்றுச்சீட்டு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும். மேலும் பரீட்சைக் கட்டணத்தை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ முடியாது.

04. **விண்ணப்பப்படிவம் :**

ஒன்லைன் பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் ஒன்லைனில் சமர்ப்பித்த மென் பிரதியையும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதியையும் பரீட்சைகள் திணைக்களம் பெற்றுக்கொண்டதும், மென் பிரதி மற்றும் அச்சுப்பிரதி சரிபார்க்கப்பட்டு, திணைக்களத்தால் செல்லுபடியாகும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது/ஏற்றுக்கொள்ளாதது குறித்த அறிவிப்பு முறைமையை அணுகப் பயன் படுத்தப்படும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS வழியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பப்படும். ஒன்லைன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பதிவிறக்கவும். விண்ணப்பத்தை நிரப்பும் போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். அச்சுப் பிரதியைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவரினால் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

05. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியான கடவுச் சீட்டு;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக்

கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல. மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

06.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப் பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதுதொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத் தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டை யிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

06.3 பரீட்சைத் தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

07. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல்முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றவகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

08.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப் பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும், போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களுக்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக் கப்படமாட்டாது.

08.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண் ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவண மொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்டரீதியில் அறிவிக்கமாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே அமர்வில் அல்லது சில அமர்வுகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம் :**

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ்க் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

| *பாடம்* | *நேரம்* | *புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 02 மணி. | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்குவிதிகள் | 02 மணி. | 100 | 40% |

| | *வினாப் பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 1 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | ➢ இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ்செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |
| 2 | நிதி ஒழுங்குவிதிகள் | இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிட்ட அதிகாரங்களை உள்ளடக்கும்.<br><br>(அ) அத்தியாயம் VI - பொது நிதியின் கட்டுக்காப்பு, அக்கறைத்தொகை, வங்கி கணக்குகள்.<br>• பகுதி 1 - பொது நிதியின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு (Custody and safety).<br>• பாகம் 2 – அடிக்கட்டை புத்தகம் (Counterfoil Book)<br>• பகுதி 3 - நாணயம், முத்திரைகள் போன்றவற்றின் சுற்றாய்வுச் சபை (Board of Survey)<br>• பகுதி 4 – அக்கறைத்தொகை (Imprest)<br>• பகுதி 5 - வங்கி கணக்குகள்<br><br>(நிதி ஒழுங்கு விதிகள் 315 முதல் 396 வரை மற்றும் அவற்றின் அனைத்து திருத்தங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.)<br><br>(ஆ) கொள்முதல் வழிகாட்டல்கள் 2006 - கொள்முதல் செயன்முறை மற்றும் பொருட்கள் மற்றும் வேலையின் கீழ் உள்ள அனைத்து திருத்தங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். { அத்தியாயம் XIII - வேலை மற்றும் சேவைகளை வழங்குவதற்கான கொள்முதல் செயன்முறை, பண்டகசாலை கணக்கெடுப்பு, பண்டகசாலை செயன்முறை, ஒப்பந்தம், கேள்விப்பத்திர நடைமுறையிலிருந்து விலகல் (நிதி ஒழுங்கு விதிகள் 708 முதல் 775 வரை)<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

குறிப்பு :

➢ மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

➢ குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. இவ் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

"சங்கியான மந்திரய",
306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

10-144

---

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை பரிபாலன பாடசாலை நுழைவுக்கான போட்டிப் பரீட்சை - 2025

(2025/2027) கல்வி ஆண்டின் பொருட்டு கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி (NVQ 05/06)

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு 2025/2027 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு இலங்கை விலங்கு பரிபாலன பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கண்டியில் நடாத்தப்படவுள்ளதால் விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இந்த பாடநெறியை பூரணப்படுத்துவதற்கு இலங்கை கால்நடை பராமரிப்பு பாடசாலையில் முழு நேர இருவருட தங்குமிட பயிற்சியின் பின்னர் 06 மாதங்கள் தொழிற் பயிற்சியையும் பெயர் குறிப்பிடப்படுகின்ற இரண்டு நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

02. **டிப்ளோமா பாடநெறி :**

2.1 இப்பாடநெறி முழுமையாக ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

2.2 இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற் பயிற்சி தகைமையை பெற்றுக் கொடுப்பது மாத்திரமாகும்.

2.3 சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் செயன் முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ துடன் அவ்வேளையில் விரிவுரைகளும் நடை பெறுவதால் விடுதிகளில் இருந்து மாணவர்களை அனுப்புவது மாதத்திற்கு ஒரு வாரஇறுதி நாளில் மாத்திரமாகும்.

03. **விண்ணப்பிப்பதற்காக இருக்க வேண்டிய தகைமைகள் :**

**சகல விண்ணப்பதாரரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா./த) தரப் பரீட்சையில் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பது கட்டாயமாகும். அத்துடன் 3.2 அல்லது 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒரு தகைமையைக் கொண்டிருப்பது போதுமானதாகும்.**

3.1 **விண்ணப்பதாரர்கள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா./த) ப் பரீட்சையில் பின்வருமாறு தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

(அ) சிங்கள மொழி மற்றும் இலக்கியம்/ தமிழ் மொழி மற்றும் இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கட்டாயம் திறமைச் சித்தியும் மற்றும் மேலும் ஒரு பாடத்திலும் கட்டாயமாக திறமைச் சித்தியும் மற்றும் ஆங்கிலத் திலும், இன்னுமொரு பாடத்திலும் சாதாரண சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களுடன் க. பொ. த. (சா./த.) ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு சித்தியடைந்த இரு தடவைகளில் ஒரே தடவையில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆகக் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

3.2 **கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ./த.) பரீட்சை:**

கல்விப் பொதுத் தராதர (உ./த.) தரப் பரீட்சையில் தகைமைகள் கீழே 3.2.1 அல்லது 3.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக ஏதேனும் ஒரு வகையில் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

3.2.1 **கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ./த.) பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப் பதாரர் :**

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல் போன்ற மூன்று பாடங்களையும் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

(ஆ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் போன்ற மூன்று பாடங்களையும் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

(இ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத்துறை யில் கீழ் உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்தின் பொருட்டு விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் போன்ற பாடப் பிரிவில் இருந்து ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3.2.2 **கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ./த.) பரீட்சை தகைமையை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர் :**

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல் போன்ற பாடங்களில் இருந்து 02 பாடங்களை ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

(ஆ) உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் இரசாயன விஞ்ஞானம் போன்ற பாடங்களில் 02 இனை ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) தொழில்நுட்பவியல் பாடப் பிரிவின் கீழ் விவசாய விஞ்ஞானத்துடன் 02 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.3 **கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ./த.) பரீட்சையில் தகைமையை மேலே குறிப்பிடப் பட்டுள்ள விதத்தில் எவ்விதத்திலும் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர் :**

(அ) கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய NVQ 4 மட்டத்தில் பாடநெறியை தொடர்ந்து இருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.4 இங்கு விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப் படுவது மேலே க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்ப தாரர்கள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ள மாணவர் எண்ணிக்கையில் 70% மற்றும் க. பொ. த. (உ./த.) தகைமைக்கு பதிலாக (3.3) தகைமையைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கும் மாணவர் எண்ணிக்கையில் 30% ஆகும். 3.2.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் தொடர்பாக கவனத்திற் கொள்வது 3.2.1 மற்றும் 3.3 சந்தர்ப்பங்களின் ஊடாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிரபார்த்த மாணவர்களின் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படாத விடத்து மாத்திரமாகும். (இந்த விகிதாசாரமானது கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்தின் பேரில் மாற்றமடையலாம்).

3.5 க. பொ. த. (உ./த.) தகைமைக்கு அமைய 3.2 இன் கீழ் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரரது வயது 2025.11.07 ஆந் திகதியன்று வயது 17 இற்கு குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.3 இன் கீழ் விண்ணப்பிக்கின்ற போது வயது 35 இனை விட குறைவாக இருப்பதுடன் விவாகமானவர் விவாகமாகாதவர் என்பது ஏற்படையதன்று.

3.6 அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் நுழைவுப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் நிராகரிக்கப்பட்ட விண் ணப்பங்கள் தொடர்பாக அறியத்தர மாட்டாது.

4. **விண்ணப்பங்கள் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய விண்ணப்ப தாரரினால் A4 அளவிலான கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் கையினால் அல்லது கணினி மூலம் தயாரித்து கையொப்பமிட்டு அனுப்பி வைக்க முடியும்.

4.2 விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2025.11.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு தபாலிடுதல் வேண்டும்.

4.3 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2025/2027 கால்நடைவள உற்பத்தி தொழில் நுட்பம் தொடர்பில் உயர் தேசிய டிப்ளோமா

பாடநெறியின் பொருட்டு கால்நடை பரிபாலன பாடசாலைகளுக்கான நுழைவு" எனும் சொற்றொடர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.4 தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி, கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்/ தொழிற் தேர்ச்சியை உறுதிப்படுததும் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி என்பவற்றை உண்மைப் பிரதி என தாமே சான்றுபடுத்தி விண்ணப்பத்துன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

4.5 சகல விண்ணப்பதாரரும் தமது கையொப்பத் தினை அரசாங்க பாடசாலை அதிபரினால், கிராம அலுவலரினால் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படை அதிகார உத்தியோகத்தரால் ரூபா 854,880.00 அல்லது அதற்கு மேலான வருடாநத வேதனம் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் பிரதம பிக்கு அல்லது ஏனைய மதஸ்தான பொறுப்பாளர் அல்லது மதக்குழுவினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவரினால் சான்றுபடுத்திக் கொள்ள வேண்டும்.

5. **பரீட்சைக் கட்டணம் :**

5.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 150.00 ஆகும். விண்ணப்பதாரர் அத்தொகையினை "கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்" அவர்களது பேராதனை, மக்கள் வங்கிக் கணக்கிற்கு 057100179027275 வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். பரீட்சைக் கட்டணம் செலுத்துகின்ற போது தானியங்கி காசு வைப்பு இயநதிரம் மூலமாகவோ, நிகழ்நிலை முறையிலோ பணம் செலுத்துவதை தவிர்க்கவும் பணம் செலுத்துவதற்கு உரிய சகல விடயங்களும் உள்ளடங்கிய வங்கி பண வைப்பு பத்திரம் மூலம் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்காக செலுத்தப்படுகின்ற கட்டணத்தை வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்ய முடியாது.

6. **விண்ணப்பங்களை நிராகரித்தல் :**

6.1 வர்த்தமான பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் கொண்டிராத, உரிய வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்கள், உரிய பரீட்சைக்கட்டணம் மற்றும் வினவப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் அறியத்தரா மலேயே நிராகரிக்கப்படும்.

6.2 விண்ணப்பங்களை நிரகரிப்பதற்கான சகல அதிகாரமும் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

7. **எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை :**

7.1 பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவது இத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய தகைமை பெறுவோரை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தெரிவு செய்யப்படுவர்.

7.2 எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் எழுத்துமூல பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(i) கால்நடை வளர்ப்பு.- க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையின் விவசாயப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக் கப்படும் பல்தேர்வு வினாக்களைக் கொண்டு அமைந்து இருக்கும். -
நேரம் : 01 மணித்தியாலம்

(ii) பொது அறிவு மற்றும் விவேகத் தேர்வு -
நேரம் : 01 மணித்தியாலம்

7.3 எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது அவ்விரண்டிற்கும் / அல்லது தோற்றுவதன் பொருட்டு விண்ணப்பதாரருக்கு எவ்வித கொடுப்பனவும் அரசினால் வழங்கப்பட மாட்டாது.

7.4 எழுத்துமூலப் பரீட்சையில் சித்தயிடைந்த விண்ணப்பதாரர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

7.5 பரீட்சை நடைபெறுகின்ற போது விண்ணப்ப தாரரால் தமது ஆளடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரி னால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **பாடநெறியை விட்டுச் செல்லல் மற்றும் போலியான தகவல்களை சமர்ப்பித்தல் :**

8.1 விண்ணப்பதாரர் எவராயினும் ஒருவர் போலியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அவரது மாணவத் தன்மை உடன் நிறுத்தத்துக்கு உட்படுத்தப்படுவர்.

8.2 பயிற்சி பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின் பயிற்சியை விட்டு விலகும் மாணவர்கள் தொடர்பில் பயிற்சியின் பொருட்டு அரசினால் அது வரையில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள் செலுத்துவதற்கும், நீர் கட்டுப்பட்டுள்ளீர். செலவின அளவை தீர்மானிக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரிய தாகும்.

9. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றிற்கு இடையே ஏதாவது பொருந்தாத்தன்மை அல்லது வேறுபாடு நிலவுமிடத்து சிங்கள மொழிமூல அறிவித்தலே செயல்வலுப்பெறும்.

கலாநிதி கே. ஏ. சீ. எச். ஏ. கொத்தலாவல,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை,
2025, ஒற்றோபர் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை விலங்கு பரிபாலன பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை
கால்நடை வள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி - 2025/2027

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : சிங்களம் [ ] தமிழ் [ ]
(உரிய கூட்டில் புள்ளடியிடுக)

1. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :
(உதாரணம் :

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | E | R | A | T | H | | M | U | D | I | Y | A | N | S | E | L | G | E |
| S | A | M | A | N | | K | U | M | A | R | A | | G | U | N | A | W | R |
| D | H | A | N | A | | | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர்: (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.)

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | U | N | A | W | R | D | H | A | N | A | H. | M. | S. | K. |

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

02. தபால் முகவரி ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. மாவட்டம் :............................................

5. பிரதேச செயலாளர் பிரிவு :...............................

6. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

7. 2025.11.07 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

8. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

WhatsApp இலக்கம் : | | | | | | | | | | |

9. ஆண்/பெண் : ....................

10. விண்ணப்பதாரரது கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) ப் பரீட்சை (முதல் தடவை) :

வருடம்: ....................  சுட்டெண் : ....................

| | *பாடங்கள்* | *சாதாரண/திறமை/அதிதிறமை* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

க. பொ. த. (சா. த.) ப் பரீட்சை (இரண்டாவது தடவை) :

வருடம்: ....................  சுட்டெண் : ....................

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

வருடம்: ................... சுட்டெண் : ...................

| | *பாடங்கள்* | *சித்தி* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(iii) கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய NVQ 4 மட்டத்தில் பாடநெறியொன்றினை பின்பற்றி இருப்பதை உறுத்திப்படுத்தல் :

| *பாடநெறியை தொடர்ந்த நிறுவனத்தின் பெயர்* | *பாடநெறியை பின்பற்றிய காலம்* | *பெற்ற தரம்* |
|---|---|---|
| | .......... முதல் ................ வரை | |

(கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய NVQ 4 மட்டத்தில் பாடநெறியொன்றினை பின்பற்றி இருப்பதை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல்)

11. பணம் செலுத்திய வங்கி பற்றுச்சீட்டின் இலக்கம் : ........................................................................................
(பற்றுச்சீட்டை வேறாக்கி எடுக்கக்கூடியவாறு இங்கே ஒட்டவும்)

12. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :.........................................................................................

13. பாடசாலையில்/ நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :........................................................................................

14. கால்நடை வளர்ப்பில் ஏதாவது அனுபவம் பெற்று இருப்பின், அது தொடர்பான விபரம் :.................................

15. கிராம அபிவிருத்தி/விவசாயம்/சமூக சேவை/விளையாட்டு தொடர்பான அனுபவம் :.........................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

16. விண்ணப்பதாரர் தொடர்பாக தகவல்கள் வினவக்கூடிய உறவு முறையல்லாத இருவரது பெயர் முகவரி :

1. .......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

2. .......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

எனது அறிவுக்கு எட்டியவரையில், மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும், எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதி மொழிகின்றேன். எனது

தெரிவின் பின்னர், இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவ நிலை முடிவுறுத்தப்படுவதுடன், பயிற்சி பெறும் காலத்தில் எனக்காக அரசாங்கத்திற்கு செலவுகள் ஏதும் ஏற்பட்டு இருப்பின், அத்தொகையை நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .........................................

குறிப்பு : கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................
4. ..........................................................................................................................

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ......................................... என்பவரை எனக்கு நன்கு தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டை ஒட்டி உள்ளார் எனவும், அவர் மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் வைத்தார் எனவும் சான்றுபகர்கின்றேன்.

........................................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : .........................................
சான்றுப்படுத்துபவரது முழுப் பெயர் : .........................................
பதவி : .........................................
முகவரி : .........................................
(தயவு செய்து உத்தியோகபூர்வ இலட்சினையை இடவும்.)

10-117